**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

# OS. No.36/2022

07.03.2026

## D.W.1- அருண்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் பி.டெக்., படித்துள்ளேன். எனது சொந்த ஊர் எலுவம்பட்டி என்றால் சரிதான். எனது ஊருக்கும், அய்யனார்குளத்திற்கும் சுமார் 5 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். நான் கலைத்துறையில் பணியாற்றி வருகிறேன். எனது அப்பா வருவாய் ஆய்வாளராகவும், எனது அம்மா ஆசிரியையாகவும் பணிபுரிந்து வருகின்றனர். தாவா வழக்கு சிவில் வழக்கு என்றால் சரிதான். நிரூபண வாக்கு மூலத்தில் கூறிய சங்கதிகள் தவறானவை என்றால் சரியல்ல. வாதியிடம் வாங்கிய கடனை திருப்பி கொடுக்க எனக்கு பொறுப்பு உள்ளது என்றால் சரிதான்.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.07 15:23:01 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.